1968 மார்ச் 5]

திரு ஏ. கோ. பாலகிருஷ்ணன் : புயல் அடித்த பகுதிகளில் எல்லாம் பழுதாகிவிட்ட ரோடுகளை பஞ்சாயத்தாலோ, பஞ்சாயத்து யூனியனாலோ நிர்வகிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிகளுக்கு ஒரு சலுகை கொடுத்து, ஏரிகளையெல்லாம் அரசாங்கமே எடுத்து பழுது பார்த்துக் கொடுப்பது போல் அந்த ரோடுகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்வதற்கு இனிமேலாவது வழி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லாவற்றுக்கும் ஒரே பதில், இப்போதுள்ள நிதிநிலை வசதியைப் பொறுத்துத்தான் இவை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதுதான்.

திரு. வ. ஜார்ஜ் : பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள ரோடுகள் சில பாலங்களைக் கட்டும் பொறுப்பை அவர்கள் ஏற்று நடத்தும்போது, அந்த யூனியனிலுள்ள ஒரு வருட வருமானம் முழுவதுமே அதற்குச் செலவிட வேண்டியிருக்கிறபடியால் மற்ற வேலைகள் பாதிக்கப்படும் நிலைமையில் இருக்கின்றன. ஆகவே, குறிப்பிட்ட தொகைக்கு மேல் செலவாகக் கூடிய பாலங்களை ஹைவேஸ் டிப்பார்ட்மெண்ட் எடுத்து நடத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாலைகள் அமைக்கின்ற நேரத்தில் பாலங்களினுடைய பிரச்சினைகளும் வருகின்றன. அவைகளையும் உள்ளிட்டுத் தான் ஆண்டுதோறும் குறிப்பிட்ட அளவு சாலைகள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன. பேருந்துகள் செல்லும் ரோடுகள் 4,500 மைல் வரை கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. பேருந்து வழித் தடங்கள் அல்லாத முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளில் 720 மைல் அளவுக்கு எடுத்திருக்கிறார்கள். அவற்றிலே பாலங்கள் வந்தால் கட்டத் தயாராக இருக்கிறார்கள். எதையும் அவ்வப்போது இருக்கிற நிதி நிலைக்குத் தக்கவாறுதான் செய்ய முடியும்.

திரு. வி. டி. அண்ணாமலை : சில ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் குறுகிய அளவு தூரமுள்ள சாலைகள் இருக்கின்றன. சில ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் அதிக தொலைவு உள்ள சாலைகள் இருக்கின்றன. ஆகவே, நீளத்திற்குத் தகுந்த முறையில் மானியம் வழங்க சர்க்கார் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சர்க்கார் யோசிப்பது எல்லாம் பணம் இல்லையே என்பதுதான்.

மாயூரத்தில் சாலை அகலப்படுத்தல்

*121 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், மாயூரம் நகரில் தற்போதுள்ள அரசின் பராமரிப்பிலுள்ள 2-ம் எண் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) நிதி வசதி கிட்டும்போது, இப்பணியைத் திட்ட இனமாக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : மாயூரம் நகரத்தில் 12 அடி அகலமே இருக்கிற அந்த ஹைவேஸ் பாதையை விரிவாக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தச் சாலையை விரிவுபடுத்துவதற்கு ஆகும் தோராயச் செலவு ரூ. 1,25,000 என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. அதுபற்றி எதிர்காலத் திட்டங்களில் ஆலோசிக்கப்படுவதாக இருக்கிறது.

திரு. நா. காசிராமன்: இந்தச் சாலையை விரிவுபடுத்தும்போது சாலையின் இரு பக்கங்களிலும் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்களில் எவ்வளவு பேர் பாதிக்கப்படுவார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தச் சாலையை நிறுவும்போது வருகின்ற ஆட்சேபணைகளைக் குறித்துத்தான் எவ்வளவு பேர் என்று சொல்ல முடியும்.

திரு. பி. வேலுசாமி : இந்தச் சாலைகளை விரிவுபடுத்துவதற்கு என்று பிரத்தியேகமான கொள்கை உண்டா ? அதற்கான தகுதிகள் என்னென்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாலைகளை விரிவுபடுத்துவதில் போக்குவரத்து ஒழுங்காக இருக்க வேண்டுமென்பதுதான் கொள்கை. அதற்காக முயற்சி எடுக்கப்படுகிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : நிதிவசதி வந்த பிறகு விரிவான திட்டமாக எடுத்துக் கொண்டாலும் போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருக்கும் பகுதிகளில் தற்காலிகமாக ரோடுகளைச் செப்பனிடும் காரியத்தை எடுத்துக் கொள்வது பற்றி யோசிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவ்வப்போது பேணுதல் செலவு (மெயின்டனன்ஸ்) என்ற அடிப்படையில் அவை எல்லாம் கவனிக்கப்பட்டுதான் வருகின்றன.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் இவ்வளவு தூரம் கவனிக்கும்போது மற்ற மாவட்டங்கள் இந்த அளவுக்குக் கவனிக்கப்படுவது இல்லையே. . . . (மணி அடிக்கப்பட்டது)

(திரு. வி. கே. கோதண்டராமன் அழைக்கப்பட்டார்.)

திரு. வி. கே. கோதண்டராமன் : நாளுக்கு நாள் பஸ்ஸின் நீள அகலங்கள் அதிகமாகும்போது ரோடுகளின் அகலமும் அதிகமாகவேண்டுமென்ற முறையில் ரோடுகளை அகலப்படுத்தும் முயற்சியில் கவனம் செலுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பஸ்களுக்குத் தகுந்தவாறு சாலைகளை அகலப்படுத்துவது இல்லை. போக்குவரத்துக்குத் தகுந்தவாறு, விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில், சுமுகமான போக்குவரத்து நடைபெறும் வகையில் சாலைகளை விரிவுபடுத்தும் முயற்சி நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது.

Land Legislation

* 122 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether there is any proposal to bring a comprehensive land legislation ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Yes. The Government have under consideration a proposal to undertake a comprehensive tenancy legislation which will replace the following Tenancy Acts in force in the State :—

(1) The Madras Cultivating Tenants Protection Act, 1955 ;

(2) The Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 ;